DFCC BANK
Keep Growing

# முக்கிய விடயங்களை உள்ளடக்கிய ஆவணம்

இந்த ஆவணமானது, DFCC பாங்க் பிஎல்சி இனால் வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படும் வங்கி சேவைகளின் சிறப்பம்சங்களை உள்ளடக்கியுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிகள், நிபந்தனைகள், பொருத்தமான கட்டணங்கள் மற்றும் கொடுப்பனவுகளை எந்தவொரு நேரத்திலும் மாற்றுவதற்கு, நீக்குவதற்கு அல்லது சேர்ப்பதற்கான முழு உரித்தினையும் வங்கி கொண்டுள்ளது. குறித்த இந்த முக்கிய-விடயங்கள் ஆவணமானது, இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைக்கமைய 2011ம் ஆண்டின் 8ம் இலக்க பிரகடனத்தின் அடிப்படையில் வர்த்தக வங்கி வாடிக்கையாளர் பட்டய உரித்து சட்டத்தின் பிரகாரம் வெளிப்படுத்தவேண்டிய வாடிக்கையாளருக்கான விபரங்களின் அடிப்படையிலேயே அளிக்கப்படுகின்றது.

## 1.0 பொருட்கள் மற்றும் சேவைகள்

இலங்கையின் வர்த்தக வங்கி என்ற ரீதியில் நாம் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை எமது வாடிக்கையாளர்களுக்கு அளிக்கின்றோம்.

| பொருட்கள் /சேவைகள் | விபரக்குறிப்புகள் |
|---|---|
| திட்டக்கடன்கள் | DFCC வங்கி விவசாயம், காடுவளர்ப்பு மற்றும் மீன்பிடி, உணவு மற்றும் பான உற்பத்தி, மின்சாரம், எரிவாயு மற்றும் நீர், கட்டடக்கட்டமைப்பு, வணிகம், ஹோட்டல்கள் மற்றும் விருந்தகங்கள், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பாடல், நிதி, காப்புறுதி, ஆதன தொழிற்துறை மற்றும் வர்த்தக சேவைகள் உள்ளிட்ட பல பிரிவுகளில் புதிய முனைப்புகள் மற்றும் ஏற்கனவேயுள்ள வர்த்தக முயற்சிகளை விரிவாக்கம் / நவீனமயமாக்கல் செயற்திட்டங்களுக்கு தேவையான நிதியீட்டத்தினை அளிக்கின்றது. |
| பணி முதலீட்டுக் கடன்கள் | நிரந்தர பணி முதலீட்டுக் கடன்களை குறித்த வர்த்தகத்தின் தேவைக்கிணங்க, நடுத்தர மற்றும் நீண்ட கால கடன்களாக நிதியீட்டமளிக்கின்றது. |
| லீசிங் வசதிகள் | வர்த்தக ஆர்வலர்கள், தொழிற்துறையாளர்கள் மற்றும் தனிநபர்களுக்கு நிதியீட்டமளித்தல் பிரதானமாக வாகனங்களுக்கான நிதி லீசிங் வசதிகள் வழங்கப்படுகின்றன. மேலதிகமாக தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளின் கீழ் கருவிகள், ஆலைகள் மற்றும் சாதனங்களுக்கான லீசிங் வசதியினையும் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். |
| உத்தரவாத வசதிகள் | நாம் ஏலப் பத்திரங்கள், முற்பண கொடுப்பனவுகள், செயற்பாட்டு கடன்பத்திரங்கள், சாதாரண வர்த்தக செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது பொருட்களை கடனில் கொள்வனவு செய்வதற்கான உத்தரவாதம் உள்ளிட்ட பல்வேறு வகை வங்கி உத்தரவாதங்களை அளிக்கின்றோம். |
| தனிப்பட்ட கடன் | தனிப்பட்ட கடன் திட்டமானது, அரச மற்றும் தனியார் தொழிற்துறையில் நிரந்தரப் பணியாற்றுபவர்களின் தனிப்பட்ட தேவைகளையே பிரதானமாக இலக்கு வைத்து அளிக்கப்படுகின்றது. எம்மிடம் தொழிற்துறையாளர்கள் மற்றும் தொழில் முயற்சியில் ஈடுபடுவோருக்கு அளிக்கும் வகையில் பல்வகை தனிப்பட்ட கடன்கள் உள்ளன. வீட்டுதொகுதிகளுக்கான நிதித் தேவைகள், வாகனக் கடன்களை பெற்றுக்கொள்தல் பிள்ளைகளின் கல்விச் செலவை எதிர்கொள்ளல் மற்றும் தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு வழங்கப்படும் |
| வணிக நிதியீட்டம் | DFCC வங்கியானது தனிநபர்கள் மற்றும் வணிக முனைப்புகளுக்கு விசேட சர்வதேச வணிகம் சம்பந்தப்பட்ட சேவைகளுக்கான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அடிப்படையில் நிதியீட்ட வசதியினை அளிக்கின்றது. கடன் கடிதங்கள், ஆவணங்கள் சேகரிப்பினை கையாள்தல், கப்பற்போக்குவரத்து உத்தரவாதங்களை அளித்தல், இறக்குமதி கடன்கள் ஊடாக நிதியீட்டமளித்தல் போன்ற பல வசதிகள் இறக்குமதி நிதியீட்டத்தில் உள்ளடங்கியுள்ளது. ஏற்றுமதி நிதியீட்டத்தில் கப்பற்சரக்கு ஏற்றுமதிக்கு முந்தைய மற்றும் பிந்திய நிதியீட்டம், ஏற்றுமதி கடன் கடிதங்களுக்கான ஆலோசனைகள், கொள்வனவு / ஒப்பந்த பேச்சுவார்த்தை கடன் கடிதங்கள் மற்றும் பில்களை சேகரித்தல் உள்ளிட்ட பல சேவைகள் அளிக்கப்படுகின்றன. |
| அடகுச்சேவை | அடகுச்சேவையானது வாடிக்கையாளர் ஒருவரின் துரித பணத் தேவையை தங்கம் அல்லது தங்க ஆபரணங்களை அடகு வைப்பதன் ஊடாக பணத்தினை பெற்றுத் தீர்த்துக்கொள்ள உதவுகின்றது. |
| மிகைப்பற்று வசதி | இந்த வசதியானது, வர்த்தக ஸ்தாபனங்கள் தமது நாளாந்த பணி முதலீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் அளிக்கப்படுகின்றது |
| கடனட்டை மற்றும் பற்று அட்டை வசதி | DFCC வங்கியின் பற்று அட்டை சர்வதேச ரீதியில் விசா அங்கீகாரம் பெற்ற அனைத்து வர்த்தக நிறுவனங்களுக்கான அணுக்கத்தினை அளித்து, பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளவும், ஏனைய ATM வலையமைப்புகள் ஊடாக பணம் மீளப்பெறல்களை மேற்கொள்ளவும் வழியமைத்துக்கொடுக்கின்றது. |
| | DFCC வங்கி சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற கடனட்டைகளை (க்ளாசிக், கோல்ட், ப்ளாட்டினம்) பல்வேறு மேலதிக பெறுமதியுடன் சேர் அம்சங்களுடன் அளிக்கின்றது. கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு கூட்டாண்மை கடனட்டைகளையும் நாம் அளிக்கின்றோம். |

| | |
|---|---|
| பொறுப்பு சேவைகள் | DFCC வங்கியானது, வாடிக்கையாளர்களின் குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பரந்தளவு வைப்பு சேவைகளை அளிக்கின்றது. தொடர்வன எம்மால் செயற்படுத்தப்படும் பிரதான கணக்குகளாகும்<br>நடைமுறைக் கணக்குகள்<br>சேமிப்புக் கணக்குகள்<br>நிலையான கணக்குகள்<br>பராயமடையாதோர் கணக்குகள்<br>சிரேஷ்ட பிரஜைகளுக்கான கணக்குகள்<br>NRFC கணக்குகள்<br>RFC கணக்குகள் |
| இணைய வங்கி சேவைகள் | இணைய வங்கி சேவையானது சௌகர்யம், துரிதம் மற்றும் பாதுகாப்பான அணுக்கத்தினை வாடிக்கையாளர்களின் கணக்குகளுக்கு அளிப்பதுடன், வாடிக்கையாளர் எந்தவொரு இடத்திலுமிருந்தும் பெருமளவு வங்கிச் சேவைகளை முன்னெடுப்பமற்கும் வழியமைக்கின்றது. நிலுவை மீதி விசாரணைகள், பாவனைப்பட்டியல் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், கடன் வழங்கும் கோரிக்கைகளை விடுத்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை வாடிக்கையாளர்கள் மேற்கொள்ளலாம் |
| வங்கி உத்தரவாதம் | வங்கி உத்தரவாதமானது, நாடளாவிய ரீதியிலுள்ள எமது கிளைகள் ஊடாக காப்புறுதிக் கோரிக்கைகளை பூர்த்தி செய்வதற்கான சௌகர்யத்தை அளிக்கின்றது. இது பல்வேறு காப்புறுதி தீர்வுகளுக்கான அணுக்கத்தினை தனிப்பட்ட மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. |
| வெளிநாட்டு நாணய பரிவர்த்தனைகள் | வெளிநாட்டு நாணயங்களிலான பரிவர்த்தனைகளை RFC, NRFC, EFC, RNNFC, SFIDA உள்ளிட்ட பல்வேறு கணக்குகளின் ஊடாக மேற்கொள்ள முடியும். அத்துடன் வங்கியின் அளவுகோல் தொகுப்பினை பூர்த்தி செய்வதன் ஊடாக வாடிக்கையாளர்கள் வெளிநாட்டு நாணயக் கடன்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினையும் பெறலாம். வெளிமுக ரெமிட்டன்ஸ்களை Telegraphic பரிவர்த்தனைகளை பயன்படுத்தி மேற்கொள்ளலாம். உள்முக ரெமிட்டன்ஸ்களை DFCC வங்கியானது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களாக விளங்கும் லங்கா மணி ட்ரான்ஸ்பர் மற்றும் வெஸ்டர்ன் யூனியன் ஊடாக மேற்கொள்ள முடியும் |
| பாவனைப்பட்டியல் / காப்புறுதி ப்ரீமியம் கொடுப்பனவு வசதி | CEB, LECO, நீர் வழங்கல் சபை, SLT, டயலொக், மொபிடல், லங்கா பெல் போன்ற பல பாவனைப்பட்டியல் பில் கொடுப்பனவுகளையும், ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ், செலிங்கோ இன்சூரன்ஸ், யூனியன் அஷ்ஷுவரன்ஸ், AIA இன்சூரன்ஸ் போன்றவற்றுக்கான காப்புறுதி ப்ரீமியம் கட்டணங்களையும் நாடளாவிய ரீதியிலுள்ள எமது கிளை வலையமைப்பினூடாக சௌகர்யமாக செலுத்த முடியும் |
| ஒருங்கிணைந்த கடன் | ஒருங்கிணைந்த கடனானது, குழுவொன்றை சேர்ந்த கடன் வழங்குனர்களால் வழங்கப்படும் ஒன்று அல்லது பல வங்கிகள் இணைந்து கட்டமைத்து, ஏற்பாடு செய்து நிர்வகித்து அளிக்கும் கடன் வகையாகும். ஒருங்கிணைந்த கடன் ஆனது, மூலதன செலவுத்தானங்கள், பணி முதலீடு, விஸ்தரித்தல் உள்ளிட்ட பொது கூட்டாண்மை காரணிகளுக்கு உதவும் வகையில் வழங்கப்படுகின்றது. |
| ஆலோசனை மற்றும் அறிவுரை சேவைகள் | வாடிக்கையாளர் ஒருவரின் தற்போதைய மற்றும் எதிர்கால வர்த்தக முனைப்பினை மேம்படுத்தி அவர்களின் வணிக முயற்சி அல்லது நிறுவனத்தை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்வதற்கான தகவல் அறிக்கையை அளிக்கின்றது. புதிய வணிக முனைப்பினை ஆரம்பிக்கையில் அல்லது ஏற்கனவேயுள்ள முனைப்பில் புதிய மாற்றங்களை மேற்கொள்கையில் நேரிடக்கூடிய சட்ட நடைமுறைகள், வரிவிதிப்பு, நிதி, சந்தை மற்றும் இடர் காரணிகள் போன்றவை தொடர்பில் இங்கு ஆராய்ந்து ஆலோசனை அளிக்கப்படும். |

**2.0 வட்டி மற்றும் கமிஷன்**

வட்டி மற்றும் கமிஷன் விகிதங்கள் அனைத்து வர்த்தக பிரிவுகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த தகவல்களை www.dfcc.lk என்ற எமது இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்

சந்தை நிலமைகளை அடிப்படையாகக் கொண்டு எமது வட்டி மற்றும் கமிஷன் வீதங்கள் காலத்திற்கு காலம் மாற்றமடையக்கூடும்.

**3.0 கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள்**

பொருத்தமான கொடுப்பனவுகள் மற்றும் கட்டணங்கள் குறித்து அறிந்துகொள்ள இத்துடன் இணைக்கப்பட்டுள்ள DFCC வங்கியின் கட்டண தாளினை பார்வையிடுங்கள். (முக்கிய விடயங்களை உள்ளடக்கியுள்ள இந்த ஆவணமும், கட்டண தாளும் வாடிக்கையாளர்கள் பார்வையிடும் வண்ணம் www.dfcc.lk என்ற DFCC வங்கியின் இணையத்தளத்திலும் தரவேற்றப்பட்டுள்ளது)

**4.0 DFCC பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள்**

சாத்தியமுள்ள அனைத்து வாடிக்கையாளர்களும் தமது கோரிக்கைகளை தலைமைக்காரியாலயத்தில் அல்லது அருகிலுள்ள கிளையின் முகாமைத்துவத்தினருடன் கலந்தாலோசிக்க முடியும். குறித்த கலந்தாலோசனையின் பினனர் வங்கியானது, சாத்தியமான வாடிக்கையாளர்களுக்கு DFCC வங்கியின் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவத்தினை கையளிக்கும். சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கைக்குக் கிடைத்ததும் குறித்த பொருள் அல்லது சேவையின் அடிப்படையில் வங்கியினால் அது பரிசீலிக்கப்பட்டு, மதிப்பாய்வு செய்யப்பட்டு, பின்னர் வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படும்

## 5.0 பிரதான விதிகள் மற்றும் நிபந்தனைகள்
வட்டி வீதங்கள், கமிஷன் வீதங்கள், கட்டணங்கள், கடன் தொகை, விலக்களிக்கும் காலப்பகுதி, உத்தரவாத கோரிக்கைகள் மற்றும் ஏனைய விசேட விதிகள் மற்றும் நிபந்தனைகள் போன்ற பிரதான விதிகள் மற்றும் நிபந்தனைகள் சேவை அல்லது செயற்திட்டத்தின் அடிப்படையில் மாறுபடக்கூடும்

## 6.0 வாடிக்கையாளர்களின் புகார்களை கையாண்டு தீர்வளிக்கும் நடைமுறை
எமது பணியாளர்கள் செயற்திறன்மிகு ஸ்நேகபூர்வ சேவைகளை முறையாக வாடிக்கையாளர்களுக்கு அளிக்கும் வகையில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். DFCC பாங்க் பிஎல்சி அதன் வாடிக்கையாளர்களுக்கு மதிப்பளித்து அவர்கள் செயற்திறன்மிகு சேவைகளை வங்கியிடமிருந்து எந்தவேளையிலும் பெற்றுக்கொள்ளும் உரித்தினை கொண்டுள்ளார்கள் என்பதற்கிணங்க அதனைக் கருத்திற்கொண்டு செயற்படுகின்றது. எனினும் நீங்கள் மோசமான சேவையினை பெற்றுக்கொள்ளுமிடத்து, அது குறித்து எழுத்து அல்லது பேச்சுமூலம் பின்வரும் பணியாளர்களிடம் முறைப்பாடு தெரிவிக்கலாம்.

| | |
|---|---|
| திரு. திமால் பெரேரா<br>பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி<br>DFCC பாங்க் பிஎல்சி<br>73/5, காலி வீதி,<br>கொழும்பு 03<br>தொ.பே - 011 2442458<br>மின்னஞ்சல் : thimal.perera@dfccbank.com | திரு.அச்சிந்த ஹேவாநாயக்க<br>பிரதான செயற்பாட்டு அதிகாரி<br>DFCC பாங்க் பிஎல்சி<br>73/5, காலி வீதி,<br>கொழும்பு 03<br>தொ.பே - 011 2371457<br>மின்னஞ்சல் : achintha.hewanayake@dfccbank.com |

மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்கப்படும் புகார்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பதிலளிப்பு மற்றும் நடவடிக்கைகள் குறித்து 7 வேலைநாட்களுக்குள் குறித்த வாடிக்கையாளருக்கு அறியத்தரப்படும்

## 7.0 கடன் மீட்பு செயன்முறை
வங்கியானது வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொண்ட கடன்களை மீளச்செலுத்தும் வகையில் இலகுவான வசதிகளை ஏற்படுத்தியளிக்க வேண்டும். இந்த முனைப்புகள் வாடிக்கையாளரின் காசுப்போக்குக்கு ஏற்ற வகையில் இசைவாக்கப்பட்டு, மீள்-திட்டமிடல், மீள்-கட்டமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்குவதுடன், வங்கியின் ஒட்டுமொத்த கடன் வழங்கல் கோட்பாட்டுக்கு அமைவாக, ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும். எனினும் வாடிக்கையாளரால், இதன் பின்னரும் தாம் பெற்ற கடனை தீர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் வங்கியானது, 1990ம் ஆண்டின் 2ம் இலக்க கடன் மீட்பு சட்டத்தின் அடிப்படையில் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு, சிவில் நடைமுறைக் குறியீடு மற்றும் மீளப்பெறுதல், மத்தியஸ்தம் போன்ற நடவடிக்கைகளும் இதன்போது முன்னெடுக்கப்படும்.

கடனானது, வங்கியினால் பாதுகாப்பான ஆதன அடைமானம் ஊடாக முன்னெடுக்கப்பட்டிருக்குமாயின், வங்கியானது, வங்கியின் கடன் மீட்பு (விஷேட ஷரத்து) சட்டத்திற்கு அமைவாக 1990ம் ஆண்டின் 4ம் இலக்க சட்டம் மற்றும் அல்லது 1949ம் ஆண்டின் 6ம் இலக்க அடமானச்சட்டம் ஆகியவற்றின் கீழ் கடன் மீளப்பெறல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதன்போது வங்கியின் சார்பில் இடம்பெற்ற அனைத்து சட்ட மற்றும் வேறு செலவுகள் வாடிக்கையாளரால் பொறுப்பேற்க வேண்டியதாகும்.

வாடிக்கையாளர் வங்கியினால் மேற்கொள்ளப்படும் குறித்த நடவடிக்கைகளை மீளப்பெற சட்டத்தின் உதவியை பெறலாம்

## 8.0 வெளிப்படுத்தல்
1988ம் ஆண்டின் 30ம் இலக்க வங்கிச்சட்டத்தின் 77வது ஷரத்தின் படி, வாடிக்கையாளர் வங்கியுடன் மேற்கொள்ளும் அனைத்து பரிவர்த்தனைகள் குறித்தும் வங்கியானது, கடுமையாக இரகசிய கோட்பாட்டினையும், மதிப்பினையும் பேண வேண்டும்.

## 9.0 2006 ம் ஆண்டின் 6ம் இலக்க நிதி பரிவர்த்தனை அறிக்கையிடல் சட்டம்
வங்கியானது பொருத்தமான சூழ்நிலை நேருமாயின், சந்தேகத்திற்கிடமான எந்தவொரு பரிவர்த்தனை அல்லது பரிவர்த்தனை முயற்சி குறித்து அல்லது சட்டத்திற்கு புறம்பான செயற்பாடு அல்லது கிரிமினல் குற்றம் இடம்பெறுமிடத்து, குறித்த பரிவர்த்தனை தொடர்பில் வங்கியானது 2006ம் ஆண்டின் நிதிப்பரிவர்த்தனை அறிக்கையிடல் சட்ட இலக்கம் 6 இன் 7ம் ஷரத்தின் கீழ் செயற்படும் நிதிப்புலனாய்வுப் பிரிவிற்கு அறியத்தரவேண்டும்.

## 10.0 முன்கூட்டியே திரும்பப்பெறல் / முடிவுறுத்தல் ஆகியவற்றுக்கான இழப்பீடு
வாடிக்கையாளரால் முன்கூட்டியே திரும்பப்பெறல் / முடிவுறுத்தல் மேற்கொள்ளப்படுமிடத்து, முன்கூட்டியே திரும்பப்பெறப்பட்ட மாதங்கள் / வருடங்களின் அடிப்படையில் வாடிக்கையாளருக்கு வங்கியினால் இழப்பீட்டுத்தொகையொன்று அளிக்கப்படும்